**அமர்வு வழக்கு எண். 48/2021**
**PW 37: சிதம்பரபாரதி**
**தேதி : 16.03.2026**

**(1ம் எதிரி கலையரசன், 4ம் எதிரி ஷேக்தாவுத், 5ம் எதிரி கோகுல்நாத், 6ம் எதிரி கிரிதர் (எ) கிரி ஆகிய எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.) (3ம் எதிரி பிரசாத், 8ம் எதிரி சீனிவாசன் ஆகியோர் ஆஜராகவில்லை. அவர்களுக்காக பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**(2ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என Crl.M.P.208/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது).**

<u>Crl.M.P. No. 132/2025–ல் 02.02.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 4, 5 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இவ்வழக்கை 12.03.2021 தேதியில் மாவட்ட துணை கண்காணிப்பாளர் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் வரை புலன்விசாரணை செய்து வந்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட ரஞ்சித்குமார் முதல்முதலில் வேலாயுதம்பாளையத்தில் உள்ள அரசு மருத்தவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். வேலாயுதம்பாளையம் அரசு மருத்தவமனையிலிருந்து இது குறித்து இன்டிமேசன் வந்ததா என்றால் தகவல் எதுவும் ரவில்லை. நீங்கள் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை சென்று விபத்து பதிவேட்டை பார்வையிட்டீர்களா என்றால் இல்லை. நான் வழக்கு நாட்குறிப்பில் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு நான் சென்ற விவரத்தை குறிப்பிடவில்லை. உங்கள் வழக்கு நாட்குறிப்பில் ரஞ்சித்குமார் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது குறித்து குறிப்புள்ளதா என்றால் இல்லை. ரஞ்சித்குமார் உடன் சுப்பிரமணி

என்ற காவலர் உடன் சென்றாரா என்றால் சரிதான். காவலர் சுப்பிரமணிக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் சுப்பிரமணி உதவி ஆய்வாளர் உடன் சென்றவர். உதவி ஆய்வாளருக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் புகார் கொடுத்தவுடன் தகவல் கிடைத்தது. புகார் அளிக்கும் முன்பே மாலை 5.30 மணிக்கு காவலர் சுப்பிரமணி சம்பவ இடத்திற்கு சென்று விட்டார் என்று சொன்னால் சரியல்ல. ரஞ்சித்குமாரின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பும்போது விபத்து பதிவேட்டை நான் பார்த்தேன். விபத்து பதிவேட்டில் ரஞ்சித்குமார் என்பவருடன் சுப்பிரமணி என்ற காவலர் மாலை 7.00 மணிக்கு கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக உள்ள ஆவணம் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் முதல்முதலாக கிடைத்த தகவலை மறைத்து பின்னிட்டு அ.சா.1 ரமேஷ் என்பவரிடம் அ.சா.ஆ.1 பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை படித்துப்பார்த்தேன். அதில் அ.சா.1 க்கும் இறந்த ரஞ்சித்குமாருக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் கலையரசனுக்கும் இறந்த ரஞ்சித்குமாருக்கும் எலக்டிரிக்கல் வேலை செய்தது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததற்காக அவர்கள் எங்கு வேலை செய்தார்கள் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று உங்கள் விசாரணையில் தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. 1ம் எதிரி கலையரசன் மெரைன் இன்ஜினியரிங் படித்துள்ளாரா என்றால் இன்ஜினியரிங் படித்துள்ளார். இறந்துபோன ரஞ்சித்குமார் படிக்கவில்லை. 1ம் எதிரி கலையரசனுக்கு திருமணமனால் 1ம் எதிரியின் மனைவியை ரஞ்சித்குமாருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று ஒயின்சாப்பில் தகராறு ஏற்பட்ட விவரத்தை நீங்கள் தெரிந்துகொள்வதற்காக ஒயின்சாப்பில் உள்ளவர்களை விசாரித்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை. இந்த

வழக்கிலிருந்து பிரிக்கப்பட்ட 7 ஆம் எதிரி மணிகண்டன் என்ற கூல்மணியை திருச்சி சிறையில் இருக்கும்போது இறந்த ரஞ்சித்குமார் சென்று பார்த்தற்காக அது குறித்த ஆவணங்களை திருச்சி மத்திய சிறையிலிருந்து வாங்கி தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் இது குறித்து திருச்சி சிறை காவல் கண்காணிப்பாளரை விசாரித்தீர்களா என்றால் இல்லை. திருச்சி மத்திய சிறையில் உள்ள ஜெகன் என்பவருக்கும் இறந்த ரஞ்சித்குமாரும் கொள்ளையடித்த வழக்கில் முன்னால் குற்றவாளிகள் என்றால் சரிதான். ஜெகனும், மற்ற எதிரிகளும் உள்ள மேற்சொன்ன கொள்ளை வழக்குகளில் யாரையும் விசாரித்தீர்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு தகவல் கிடைத்து நான் இரவு சென்றேன். அன்று இரவு நான் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. நீங்கள் இரவில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யலாம் என்று சொன்னால் சரிதான் அன்றைய தினம் டார்ச் லைட் போன்ற உபகரணங்கள் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்காததால் நான் மறுநாள் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நீங்கள் வரைந்த பார்வை மகஜர், வரைபடத்தில் 91 கபேயிலோ, அக்ஷயா ஹோட்டலில் உள்ள சிசிடிவி பற்றி குறிப்பில்லை என்று சொன்னால் சரிதான். சிசிடிவி கேமரா மற்றும் அதன் கம்பெனி பெயரோ, அது எவ்வளவு மெமரி இருக்கும் என்று குறிப்பு எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. பெட்ரோல் பங்கில் உள்ள 18 கேமராக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். 18 கேமராக்களில் உள்ள அனைத்து பதிவுகளையும் நீங்கள் பதிவேற்ற வேண்டும் என்று சொன்னால் சரியல்ல 3 கேமராவில் தான் எதிரிகள் பற்றி படம் பதிவானதால் அதை மட்டும் தான் நான் வழக்கிற்கு ஆதரமாக எடுத்து வைத்துள்ளேன். அக்ஷயா ஹோட்டர் உரிமையளார், 91 கபே உரிமையாளரை நான் விசாரித்துள்ளேன். அ.சா.4 சிவக்குமார், அ.சா.7 திருமாவளவன் ஆகியோர் நீங்கள் விசாரிக்கும்போது 65 பி சான்றிதழில் கொடுத்த குழந்தைவேல் வந்து

பதிவிறக்கம் செய்ததாக உங்கள் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சிசிடிவி கேமராவின் உரிமையாளரோ, யாருடைய பொறுப்பிலோ, பாதுகாப்பிலோ இருந்ததோ அவர்கள் தான் 65பி சான்றிதழ் வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.41, அ.சா.ஆ.42, அ.சா.ஆ.43 ஆகிய 65பி சான்றிதழ்களில் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.43 65 பி சான்றிதழில் குழந்தைவேலின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.41, அ.சா.ஆ.42, அ.சா.ஆ.43 ஆகிய 65பி சான்றிதழ்கள் 28.12.2020 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சிசிடிவி பதிவுகளை பென்டிரைவில் நேரடியாகவும், டிவிடியில் பதிவு செய்ய தோதாக இருந்தா என்றால் குழந்தைவேல் கொண்டு வந்த லேப்டாப்பில் பதிவிறக்கம் செய்து பின்னர் அதை டிவிடியிலும், பென்டிரைவிலும் பதிவு செய்து கொடுத்தார். அ.சா.ஆ.33 முதல் அ.சா.ஆ.38 வரையுள்ள ஆவணங்கள் மேற்சொன்னவாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் ஹார்ட்டிஸ்க்கையும், டிவிஆரையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். டிவிஆரையும், ஹார்டிஸ்க்கையும் மேற்சொன்ன ஆவணங்களையும் ஒப்பீடு செய்து பார்த்தால் தான் உண்மைதன்மை தெரியும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் இரண்டு ஆவணங்களையும் ஒப்பீடு செய்ய முயற்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பெட்ரோல் பங்கில் எடுத்த சிசிடிவி புட்டேஜ்களையும், 91 காபி ஷாப்பிலி எடுத்த சிசிடிவி பதிவுகளையும் ஒப்பீடு செய்து பார்த்தீர்களாஎன்றால் இல்லை. காபி ஷாப்பிலிருந்து பெட்ரோல் பங்கு 8, 9 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள சிசிடிவி பதிவுகளை நான் கைப்பற்றவில்லை. இரண்டு வீடியோக்களையும் மானுடவியலுக்கு அனுப்பி ஒப்பீடு செய்தீர்களா என்றால் இல்லை. 1, 4, 5, 7 மற்றும் 8 ஆகிய எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம்

நீதிமன்றத்திற்கு 08.01.2021–ல் தான் அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். நீங்கள் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை குற்றவியல் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் அன்றைய தினமே ஒப்படைக்காததால் படிவம் 95 திருப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் சான்று பொருட்கள் அனைத்தும் உங்கள் காவல்நிலையத்தில் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். பென்டிரைவ், டிவிடிக்குரிய படிவம் 95 யை 08.01.2021 இல் தான் நீதிமன்றத்திற்கு அனுப்வி வைத்துள்ளீர்கள் என்ற சொன்னால்சரிதான். இடைப்பட்ட காலத்தில் டிவிடி, பென்டிரைவ் அனைத்தும் உங்கள் காவல்நிலையத்தில் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான். ஏழு கன்னிமார் கோவில் அருகில் உள்ள முட்புதர் அருகில் தான் 7 எதிரிகளிடமிருந்தும் சான்று பொருட்கள் கைப்பற்றினீர்கள் என்று சொன்னால் சரிதான் ஆத்துப்பக்கத்தில் 10 முதல் 20 மீட்டர் நீளத்தில் உள்ள புதரில் தான் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது. நீங்கள் கூறுவது போல் எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த சான்று பொருட்கள் அனைத்தும் கைப்பற்றவில்லைஎன்றும் நீங்கள் அத்தாட்சிகள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளீர்கள் என்ற சொன்னால் சரியல்ல. 7, 8 எதிரிகளை கைது செய்த போது சாட்சியாக இருந்த விஜயானந்த் கிராம நிர்வாக அலுவலர், தனலெட்சுமி, கிராம உதவியாளர் ஆகிய இருவரும் எதிரிகள் இடுப்பில் மறைத்து வைத்திருந்த சூரிக்கத்தி என்று சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் முட்புதரிலிருந்து எடுத்துக்கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை என்ற சொன்னால் சரிதான். அ.சா.1 க்கு சம்பவத்தினை பற்றி நேரடியாக தெரியாது என்றும் வான்மதி கூறி தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். வான்மதியும், அ.சா.1 பேசிய தொலைபேசி ஆவணங்களான சிடிஆரை நீங்கள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.1 இந்து நாயக்கர் போயர்

வகுப்பை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். ரஞ்சித்குமார் மனைவி கொடுத்த புகார் கொடுத்ததன் அடிப்படையில் இறந்துபோன ரஞ்சித்குமார் சிறையில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். இறந்த ரஞ்சித்குமாரின் மனைவி புனிதவள்ளியின் சகோதரர் பிரவீன்குமார் மற்றும் அவரது உறவினர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அ.சா.5 வான்மதியும், இறந்துபோன ரஞ்சித்குமாருக்கும் கள்ளதொடர்பு இருந்ததை தெரிந்துகொண்டேன். அ.சா.5 வான்மதியின் கணவர் லோகநாதனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா என்றால் இல்லை. வழக்கு சமயத்தில் லோகநாதன் எங்கு இருந்தார் என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. இறந்த ரஞ்சித்குமாருக்கும் அவர் மனைவி, உறவினர் வகையிலும், வான்மதியின் கணவர் மற்றும் உறவினர் வகையிலும், ஏற்கனவே திருச்சியில் உள்ள வழக்கில் பணம் பிரிப்பதில் அவர்களிடையே இருந்த பிரச்சனை போன்ற பலமுன்விரோதம் இருந்து வந்ததால் அவர்களால் யாரோ ஒருவரால் இறந்துபோன ரஞ்சித்குமார் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட செருப்பினை அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளோம். புட்பிரிண்ட் கண்டுபிடிக்க முடியவில்லை. யாருடைய செருப்பு என்று கண்டுபிடிக்கவில்லை. தெரியாக எதிரிகளை அடையாளம் கண்டுபிடிக்க அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. நீங்கள் முதல் விசாரணையில் கூறிய படி எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

3_05_R_17122020042304PM-2 விடியோ பதிவில் 00.48 விநாடியில் நிறுத்தி சாட்சியிடம் விசாரித்தபோது மஞ்சள் நிற சட்டை மற்றும் அரைக்கால் டிரவுசர் போட்டு ஓடும் நபர் இறந்துபோன ரஞ்சித்குமார் ஆவார். பின்னால்

வரும் வெள்ளை சட்டை, பேன்ட் அணிந்து வரும் நபர் கூல்மணி ஆவார். அவருக்கு பின்னால் ஓடி வருபவர் உதயநிதி என்ற சூர்யா ஆவார். அவருக்கு பின்னால் மஞ்சள் நிற அரைப்பேண்ட் போட்டு வருபவர் பிரசாந்த் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவருக்காக பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவருக்கு பின்னால் வருபவர் ஷேக்தாவுத் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவருக்கு பின்னால் வருபவர் பிரசாத். அவருக்கு பின்னால் கைலி கட்டிக்கொண்டு வருபவர் கலையரசன். ஆஜர் எதிரிகளை நீதிமன்றத்தில் சாட்சி அடையாளம் காண்பித்தார். 3_01_R_17122020042304PM விடியோ பிளே செய்து காண்பிக்கபட்டு இறந்துபோன ரஞ்சித்குமார் மஞ்சள் நிற சட்டை அணிந்து செல்பவர். அவருக்கு பின்னால் மணிகண்டன் துரத்திச்செல்கிறார். மஞ்சள் முக்கால் டிராயர் அணிந்து வருபவர் பிரசாந்த் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. நீல நிற சட்டை மற்றும் பேன்ட் போட்டு வருபவர் பிரசாத் ஆவார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவருக்கு பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. லுங்கி கட்டிக்கொண்டு செல்பவர் கலையரசன். அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் அவரை சாட்சி சரியாக அடையாளம் காண்பிபத்தார். தொப்பி போட்டு முன்னால் ஓடும் நபர் கோகுல்நாத். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவரை சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். A02_20201217165200 வீடியோல் 01.41 நிமிடத்தில் நிறுத்தி காண்பிக்கப்பட்டதில் வண்டியில் மொட்டையடித்து வருபவர் ஆஜர் 1ம் எதிரி

கலையரசன் ஆவார். 01.48 நிமிடத்தில் நீலநிற சட்டை அணிந்து வருபவர் ஆஜர் எதிரி ஷேக்தாவுத் ஆவார். மொட்டையடித்து தொப்பி அணிந்து வருபவர் சூர்யா ஆவார். வெள்ளை டீசர்ட், மஞ்சள் அரைக்கால் டிராயர் அணிந்திருப்பவர் பிரசாந்த். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. A05_20201217165200 விடியோ பிளே செய்து காண்பிக்கப்பட்டு அதில் 2.18 நிமிடத்தில் பைக்கில் மஞ்சள் பனியன் அணிந்து பெட்ரோல் போடும் நபர் சீனிவாசன். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கு பின்னால் வெள்ளை நிறத்தில் சட்டை அணிந்து பணம் எடுக்கும் நபர் கூல்மணி ஆவார். 3.28 நிமிடத்தில் பைக்கின் முன்னால் பனியன் அணிந்து கொண்டு ஓட்டுபவர் நபர் சீனிவாசன். நடுவில் மொட்டை அடித்துக்கொண்டு இருப்பவர் சூர்யா ஆவார். அவருக்கு பின்னால் மஞ்சள் நிற டிராயர், வெள்ளை நிற பனியன் அணிந்திருப்பவர் பிரசாத். லுங்கி அணிந்து சட்டை போட்டு தொப்பி அணிந்திருக்கும் நபர் ஆஜர் எதிரி கோகுல் ஆவார். அவர்கள் சாட்சி சாரியாக அடையாளம் காண்பித்தார். பைக்கில் வெள்ளை நிற சட்டை அணிந்திருப்பர் கூல்மணி ஆவார். மொட்டையடித்துக்கொண்டு வெள்ளை நிற சட்டைபோட்டுக்கொண்டு பைக்கில் அமர்ந்திருக்கும் நபர் கலையரசன் ஆவார். கலையரசனுக்கு பின்னால் நீல நிற சட்டை போட்டு உட்கார்ந்திருப்பவர் ஷேக்தாவுத். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார. அவரை சாட்சி சாரியாக அடையாளம் காண்பித்தார்.

<u>1, 4, 5 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

91 கபே மற்றும் அக்சயா ஹோட்டலில் எடுக்கப்பட்ட படங்களில் எதிரிகளின் முகங்கள் தெளிவாக தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல எதிரிகளை கைது செய்து போது பார்த்ததை வைத்து நான்

அடையாளம் சொல்கிறேன். எதிரிகளின் புகைப்படங்களை வைத்து வீடியோவில் உள்ள நபர்களை அறிவியல் பூர்வமாக புலன்விசாரணை செய்யாததால் விடியோவை ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொன்னால் சரியல்ல. வீடியோக்கள் எடிட் செய்து டாம்பர் செய்ததால் ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொன்னால் சரியல்ல எடிட், டேம்பர் செய்யவில்லை. இந்த வீடியோ முழு வீடியோவாக இல்லாததால் ஏற்றுக்கொள்ளத்தக்கல்ல என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வீடியோக்களை சட்டவிதிகளுக்கு புறம்பாக பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.16 18:08:55 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.